

திருச்சி அரியமங்கலம் 16, 35 வது வார்டுக்கு உட்பட்ட பொதுமக்கள் அரியமங்கலம் மண்டலம் 3–ல் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாம் நடைபெற்றது. இதில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு பொதுமக்களிடம் கலந்துரையாடினார் . பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றி தர நடவடிக்கை எடுக்குமாறு அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.



கரூர் மாவட்டம், மண்மங்கலம் மரவாபாளையத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில், கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளனர்.

### கோத்தகிரி வட்டம் – தேனாடு ஊராட்சியில் நடந்த

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் - 545 பழங்குடியினர் பங்கேற்பு!

## தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் ஆய்வு!

நீலகிரி, ஜூலை 25 -

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், தேனாடு ஊராட்சிக்குட்பட்ட சோலூர்மட்டம் ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை, அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டம் அரக்காடு ஊராட்சி சுற்றுவட்டார பகுதியில் இருந்து கிராமங்கள் உள்ளடக்கிய பழங்குடியினர் மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் முகாம் சோலூர் மட்டம் தேனாடு ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் அரக்கோடு சுற்றியுள்ள பகுதியிலிருந்து 1065 மக்கள் தொகை கொண்ட கிராமப்புறங்களில் இருந்து மதியம் 1 மணிக்குள் 545க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் வருகை தந்து அவர்களின் கோரிக்கைகளை பதிவு செய்தனர்.

இம்முகாமினை அரசு தலைமை கொறடாவு கா. ராமச்சந்தி ரன் ஆய்வு மேற்கண்ட போது அவரிடம் அப்பகுதி பழங்குடிமக்கள் இதற்கு முன் இவ்வாறன நிகழ்வுகள் தங்கள் பகுதியில் நடைபெறவில்லை எனவும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அனைத்து துறைகளும் ஒரே இடத்தில் பங்கு பெற்றதால் தங்களது அனைத்து வகையான குறைகளை (ஆதார் கார்டு திருத்தம்,ஜாதி சான்றிதழ், மகளிர் உரிமைத் தொகை, மின் இணைப்பு பெயர் மாற்றம், இலவச வீட்டு மனை பட்டா போன்ற ஒன்று தேவைகளை) தீர்த்து வைக்க இந்த முகாம் ஏதுவாக அமைந்ததில் பெரு மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர் .

இந்நிகழ்வில் அதிகாரிகள் மற்றும் கீழ் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம் திருவெள்ளறை ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவன் தொகுதி மக்களை சந்தித்து அவர்களின் நிறை மற்றும் குறைகளை கேட்டறிந்து கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி அவர்களுக்கு மதிய உணவு வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர்கள், நகரச் செயலாளர்கள், கிளைச் செயலாளர்கள், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பலர் உள்ளனர்.

# சென்னை - தஞ்சைக்கு வந்தே பாரத் ரயில் இயக்கப்படுமா?

## நாடாளுமன்றத்தில் எஸ்.முரசொலி கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 25 -

இந்திய ஒன்றிய அரசுக்கு தஞ்சாவூரிலிருந்து சென்னைக்கு வந்தே பாரத் விரைவு வண்டியை (Vande Bharah Express) இயக்கும் திட்டம் உள்ளதா என்று தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி கேள்வி எழுப்பியுள்ளார்.



ஒன்றிய அரசின் ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களிடம் இந்த கேள்வியை எழுப்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பயன்படுத்த படாத அம்ரிட் பாரத் பெட்டிகள் தென்னக ரயில்வேக்கு கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும் கேட்டுள்ளார்.

இதற்கு பதில் அளித்துள்ள அமைச்சர், தற்பொழுது பத்து ஜோடி ரயில் சேவைகள் தஞ்சாவூர் சென்னை மார்க்கத்தில் இயக்கப்படுகிறது என்றும், 12 வந்தே பாரத் ரயில்கள் சென்னை பகுதியில் இயக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பதினான்கு அம்ரிட் பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் சேவைகளில் 8 சேவைகள் ஜூலை 18 முதல் இயங்குகின்றன.

ரயில் சேவைகள், டிராபிக், தேவை முதலியவற்றைக் கொண்டே நிர்ணயிக்க ப்படுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார்.

### பள்ளிப்பாளையத்தில் சிறுநீரக விற்பனை பிரச்சினை!

# மருத்துவமனைகளின் உரிமம் நிறுத்தி வைப்பு!

## மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை!

சென்னை, ஜூலை 25–

நாமக்கல் மாவட்டம் பள்ளிப் பாளையத்தில் சிறுநீரகம் விற்றதாக வந்த செய்தியின் அடிப்படையில் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் முதற்கட்ட விசாரணை அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அறிக்கை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: –

தொலைக்காட்சி மற்றும் பத்திரிக்கை செய்திகளில் வரப்பெற்ற முறைகேடான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை குறித்து விசாரித்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்க தமிழ் நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு. எஸ்.வினீத், அவர்களை நியமித்து 18.07.2025 அன்று ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு.எஸ்.வினீத், மரு.இரா. ம. மீனாட்சிசுந்தரி, இணை இயக்குநர் (சட்டம்), மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை, மரு.ஏ. ராஜ்மோகன், இணை இயக்குநர் நலப்பணிகள் நாமக்கல், மரு.கே. மாரிமுத்து, இணை இயக்குநர் நலப்பணிகள் பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டம், சீத்தாராமன், காவல் துணை கண்காணிப்பாளர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை ஆகியோர் அடங்கிய குழு தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான விசாரணை மேற்கொண்டனர்.

இவ்விசாரணையின் அடிப்படையில் முதற்கட்ட விசாரணை அறிக்கையினை மரு.எஸ்.வினீத், அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த முதற்கட்ட விசாரணை அறிக்கையின் அடிப்படையில் தனலட்சுமி சீனிவாசன் மருத்துவக் கல்லூரி மருத்துவனை, பெரம்பலூர் மற்றும் சிதார் மருத்துவனை, திருச்சி ஆகிய மருத்துவமனைகளுக்கு மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை சட்டம் 1994 பிரிவு 16 உட்பிரிவு (2) ன்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள வழங்கப்பட்ட உரிமம் பொதுமக்கள் நலன் கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.


